# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 26/மா/2018
ஆணை நாள்: 8.7.2019

திரு. எம். செய்யது முகம்மது,
மதுரை - முறையீட்டு மனுதாரர்

திரு. எஸ்.பாலசுப்பிரமணியன்,
உதவியாளர்,
மதுரை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

மதுரை மாநகராட்சி, சுங்கம்பள்ளி வாசல் தெரு, எண். 51/17A என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். செய்யது முகம்மது என்பவரது 15.2.2018 நாளிட்ட முறையீட்டு மனு 15.2.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 26/2018 என எண்ணிடப்பட்டு, உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாநகராட்சி, சுங்கம்பள்ளி வாசல் தெரு, எண். 51/17A என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். செய்யது முகம்மது என்பவர் சமர்ப்பித்துள்ள 15.2.2018 நாளிட்ட தனது மனுவில் மதுரை மாநகராட்சியின் 4வது மண்டலத்தில் பணிபுரியும் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் என்பவர் அம்மண்டலத்தில் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும் அவரது பணிக்காலத்தில் சொத்துக்குரிய உரிமையாளர்களை மிரட்டி பணம் பறிப்பது, இதனை ஆணையரிடம் புகாராக தெரிவித்தால் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து நீதிமன்ற வழக்குகள் என்று அலைய விடுவது

இவரது வழக்கமாகும் என்றும், புகார்களின் மீது மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் முறையிட்டுள்ளார். மேலும், மதுரை மாநகராட்சியின் 4வது மண்டலத்தில் உள்ள தனது சொத்துக்ளுக்கான வரிவிதிப்பு எண்கள். 71192, 71193, 71194, 71195, 71197, 71198, 71199, 71200 மற்றும் 71201 ஆகும் என்றும் ஆனால் தன் பெயரில் இருந்து வந்த சொத்து வரிவிதிப்புகளை, தனது இடத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து போலியாக தனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்களை இட்டு பத்திரங்கள் தயார் செய்துள்ள ஆவணங்களை ரத்து செய்யவும், ஆக்கிரமிப்புகளை காலி செய்து ஒப்படைக்கவும் கோரி மதுரை 5வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு O.S.No.147/2015 மற்றும் 3வது சப்கோர்ட்டில் அசல் வழக்கு O.S.No.891/2015 என இருவழக்குகள் விசாரணையில் உள்ளது என்றும், தனது சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களிடம் எவ்வித ரெவின்யூ ஆவணங்களும் இல்லை என்றும், பட்டா மற்றும் ஆவணங்கள் தனது பெயரில் உள்ளதென்றும், மேற்படி வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் ஆக்கிரமிப்புதாரர்கள் பெயரில் வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று தெரிவித்து தனது பெயரில் உள்ள ரெவின்யூ ஆவணங்களின் நகல்கள் மற்றும் வழக்குகளின் விபரங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு. பாலசுப்பிரமணியனின் ஆலோசனையின் பேரில் ஆக்கிரமிப்பாளர்கள் கீழ் கோர்ட்டில் வழக்குகள் நடைபெறுவதை மறைத்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் ஒரு உத்திரவினை பெற்று பெயர் மாற்றம் செய்துள்ளதாகவும், மதுரை மாநகராட்சியின் குத்தகை இனங்களை புதுப்பித்தல் தொடர்பாக மாநகராட்சிக்கு ரூ.3,17,912/- நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது தொடர்பாக தனியர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், ஏலதாரரால் வழங்கப்பட்ட தொகை ரூ.1,41,054/- ஐ மாநகராட்சி கணக்கில் வரவு வைக்காமல் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியது தொடர்பாக தனியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய பல்வேறு கோப்புகள் மாயமாகிவிட்டது என்றும், மேற்குறிப்பிட்ட முறைகேடுகள் தொடர்பாக திரு. பாலசுப்பிரமணியன் உதவியாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தனது முறையீட்டு மனுவில் கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 19.2.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி மதுரை மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

மதுரை மாநகராட்சியின் 4வது மண்டல உதவி ஆணையர் 12.3.2018 நாளிட்ட அறிக்கையில் மதுரை மாநகராட்சியின் பொறியியல் பிரிவில் உதவியாளராக பணிபுரியும் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பல்வேறு பிரிவுகளை சார்ந்துள்ளது என்றும், பல்வேறு பிரிவுகளில் உள்ள விபரங்களை ஒருங்கிணைத்து விரிவான அறிக்கையினை விரைவில் அனுப்பி வைப்பதாக தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 8.3.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 19.3.2018 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மதுரை மாநகராட்சியின், தெற்கு ஆவணி மூலவீதியில் தனக்கு சொந்தமான கடைகள் உள்ளன என்றும், அந்த இடங்களை வரதராஜன் மற்றும் 34 நபர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள் என்றும், இது சம்மந்தமாக மதுரை 3வது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 891/2015 ன்படி ஒரு வழக்கும், இன்னொரு வழக்கு 5வது கூடுதல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 147/2015 ன்படி தனது மகன்கள் திரு. முகமது முபாரக் மற்றும் திரு. ராஜா முகம்மது ஆகியோரால் திரு. வரதராஜன் மற்றும் 9 நபர்கள் மீது வழக்கு தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும், 2013 ஆம் ஆண்டு பெயர் மாற்றம் குறித்து ஒரு மனு வந்துள்ளபடியால் தங்களது சம்மந்தப்பட்ட ஆவணங்களை சார்பு செய்யும்படி மாநகராட்சியிலிருந்து கடிதம் வந்ததாகவும், நீதிமன்ற ஆணை வந்த பின்பு மாற்றங்கள் செய்யலாம் என்றும் தற்பொழுது எந்த மாற்றமும் செய்ய வேண்டாம் என குறிப்பிட்டு பதிவு அஞ்சல் மூலம் தெரிவித்ததாகவும், திரு. எஸ். பாலசுப்பிரமணியன் வழக்கு முடிந்த பிறகு பெயர் மாற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என கடிதம் எழுதினார் என்றும், தனது வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் மாற்றம் செய்து தருமாறு வேண்டிக் கொண்டார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 8.3.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி மதுரை மாநகராட்சி 4வது மண்டலத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் என்பவர் 19.3.2018 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் 2015-2016 வரை சொத்துவரி மனுதாரர் திரு. செய்யது முகம்மது என்பவரின் பெயரில் இருந்தது என்றும், 2016ல் ஆதிலட்சுமியம்மாள் டிரஸ்ட் மற்றும் 5 நபர்களின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண். 816/2015-ல் வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கு பின்பு அவர் மதுரை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அந்த இடைக்காலத்தில் தன்னிடமும் மற்றும் மாநகராட்சியிடமும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய கோரியிருந்தார் என்றும், நீதிமன்ற ஆணை பெற்று வந்தால் தங்களது பெயருக்கு மாற்றம் செய்யலாம் எனத் தெரிவித்து, மாநகராட்சி ஆணையரிடமிருந்து ஜூன் 2014 ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அவரது மனுவில் குறிப்பிட்டுயிருந்த காசோலை விபரம் சம்மந்தமாக மாநகராட்சியின் நடவடிக்கையில் உள்ளது என்றும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 20.5.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 19.6.2019 அன்று மதுரை மாநகராட்சியின் 4வது மண்டல அலுவலர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் மதுரை மாநகராட்சியின் மைய வருவாய் பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த காலத்தில் குத்தகை வழங்கியதில் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்காக அவருடைய ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்வதற்கான ஆணையும், அதே போன்று ஓய்வு பெற்ற உதவி ஆணையர் திருமதி. ஆர். எஸ். சாந்திமாய் அவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய இழப்பு தொகையையும் பிடித்தம் செய்திட மாநகராட்சியால் ஆணையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சியின் 4வது மண்டல அலுவலர் விசாரணையின்போது அளித்த 9.6.2019 நாளிட்ட அறிக்கையில் மதுரை மாநகராட்சியின் பொறியியல் பிரிவில் உதவியாளராக பணிபுரியும் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மீது மநி1/26977/2015 கோப்பின் மூலம் தனியர் மீது குத்தகை இனங்கள் புதுப்பித்தல் தொடர்பான வருவாய் இழப்பின் மீது தனியரின் பங்காக ரூ.1,27,190/- ஐ மார்ச் 2019 மாத ஊதியத்திலிருந்து ரூ.3000/- வீதம்

பிடித்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தனியரின் மார்ச் 2019 மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், மண்டலம் 4 தொடர்புடைய பெயர் மாற்ற கோப்புகள் ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், இக்குழு தற்பொழுது பெயர் மாற்றம் தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது என்றும், அவ்வறிக்கையின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிடப்பட்ட மாநகராட்சியின் வருவாய் இழப்புக்கு காரணமானவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய தொகை குறித்து மதுரை மாநகராட்சி ஆணையரால் வழக்கப்பட்ட உத்தரவின் நகலை சமர்ப்பித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி ஆணையரின் செயல்முறை மறி1/26977/2015 நாள் 18.3.2019ல் குத்தகை தொகை குறைவாக கணக்கீடு செய்ததினாலும் பொது ஏலத்திற்கு கொண்டு வராமல் உரிமத்தை புதுப்பித்தல் செய்த வகையில் மதுரை மாநகராட்சிக்கு ஏற்பட்ட இழப்புத் தொகை ரூ.3,17,992/-ல் மைய வருவாய் பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு. எஸ். பாலசுப்பிரமணியன் என்பவருக்கு தனிபொறுப்பு என்ற வகையில் 40 சதவீதம் தொகையினை தனியரின் பங்காக ரூ.1,27,190/-ஐ தனியரின் ஊதியத்திலிருந்து மார்ச் 2019 மாத ஊதியத்திலிருந்து ரூ.3000/- வீதம் 42 தவணைகளில் ரூ.1,26,000/- மும் மீதித் தொகை ரூ.1,190/-ஐ 43வது தவணையாகவும் பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியின் உதவி ஆணையர் (வருவாய்) ஆக பணிபுரிந்து ஒய்வு பெற்ற திருமதி. R. S. சாந்திமாய் என்பவரின் தனிப்பொறுப்பாக 20 சதவீதம் தொகை ரூ.63,594/-ஐ தனியரின் ஒய்வூதிய பயன்கள் மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது எனவும் அவ்வாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, விசாரணையின் போது பெறப்பட்ட வாக்கு மூலங்கள் மற்றும் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, மதுரை மாநகராட்சியின் 4வது மண்டல அலுவலரின் அறிக்கை ஏற்கப்பட்டது. மதுரை மாநகராட்சியின் மைய பொறியியல் பிரிவில் உதவியாளராக பணிபுரியும் திரு. எஸ். பாலசுப்பிரமணியன் என்பவர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் தொகை தவணை தவறாமல் பிடித்தம் செய்வதை காண்காணிக்கவும், தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து ஆய்வுக் குழுவின் அறிக்கையினைப் பெற்று உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை

உரிய விதிமுறைகளின்படியும், தற்பொழுது நீதிமன்றங்களில் நடைபெற்று வரும் வழக்குகளில் வழங்கப்படும் தீர்புரைகளின் அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விபரங்களை அறிக்கையாக 30 தினங்களில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவும் மதுரை மாநகராட்சியின் 4வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ).

பெறுநர்

1. திரு. எம். செய்பது முகம்மது,
51/17A, சங்கம்பள்ளி வாசல் தெரு,
மதுரை – 625 001.

2. மண்டல அலுவலர்,
மண்டலம் - 4,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3. ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்